DINAMALAR

13 JUNE 2023

PAGE 4

# சமுதாய கல்லூரியில் சேர விண்ணப்பங்கள் வரவேற்பு

**புதுச்சேரி, ஜூன் 13–**

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் மாணவர் சேர்க்கைக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

லாஸ்பேட்டையில் இயங்கி வரும் புதுச்சேரி மத்திய பல்கலையின் சமுதாய கல்லூரியில் இந்த கல்வி ஆண்டுக்கான இளங்கலை, முதுகலை பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு கடந்த 1ம் தேதி முதல் வரும் 30ம் தேதி வரை சமுதாய கல்லூரியின் இணையதளம் http://pucc.edu.in மூலம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விருப்பம் உள்ளவர்கள், இணையதளம் மூலம் விண்ணப்பித்து வரும் ஜூலை மாதம் நடக்கவுள்ள மாணவர் சேர்க்கையில் பங்கேற்று பயன்பெறலாம்.

இங்கு, கற்பிக்கப்படும் இளங்கலை, முதுநிலை பட்டம், பட்டயம், சான்றிதழ் படிப்புகள் பற்றிய விபரங்கள் கல்லூரி இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

DINA THANTHI

13 JUNE 2023

PAGE 10

பல்கலைக்கழக

# சமுதாய கல்லூரியில் மாணவர் சேர்க்கை

## ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்பு

லாஸ்பேட்டை, ஜூன்.13-

புதுச்சேரி லாஸ்பேட்டையில் உள்ள பல்கலைக்கழக சமுதாய கல்லூரி முதல்வர் (பொறுப்பு) லலிதா ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

லாஸ்பேட்டையில் உள்ள புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் சமுதாய கல்லூரியில் 2023-24-ம் கல்வி ஆண்டிற்கான இளங்கலை, முதுநிலை, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் கடந்த 1-ந் தேதி தொடங்கி வருகிற 30-ந் தேதி வரை சமுதாய கல்லூரி இணையதளமான *http://pucc.edu.in* மூலம் விண்ணப்பிக்கப்பட்டு வருகிறது.

சமுதாய கல்லூரியில் இளநிலை கணினி பயன்பாடுகள், வணிக நிர்வாகம், உயிர் வேதியியல், ஊடகவியல், வணிகவியல், உடற்கல்வியியல், இளங்கலை மருத்துவ தொழில்நுட்ப படிப்புகளான இருதய பரிசோதனை தொழில்நுட்பம், கதிர் வீச்சு மற்றும் நிழற்பட தொழில்நுட்பம், கண்பார்வை தொடர்பான மருத்துவ தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் சேவை தொழில்நுட்பம், கணினி மென்பொருள் மேம்பாட்டு தொழில்நுட்பம் போன்ற படிப்புகளும், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், மருத்துவமனை செவிலியர், சுகாதார ஆய்வாளர், நோய் தொற்று அறிவியல், பத்திர எழுத்தர், யோகா, நாடகக்கலை, திரைப்பட நடிப்புக்கலை, இந்திய இசைக்கலை, கர்நாடக இசை, பரதநாட்டியம், வரைகலை, ஓவியக்கலை, நுண்கலை உள்ளிட்ட ஒரு வருட பட்டயம் மற்றும் 6 மாத சான்றிதழ் படிப்புகளும் உள்ளன.

இந்த படிப்புகளில் சேர்வதற்கு பிளஸ்-2 வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முதுநிலை பட்டயப்படிப்புகளில் சேர்வதற்கு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு சமுதாய கல்லூரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

MAALAI MALAR

13 JUNE 2023

PAGE 2

# சமுதாய கல்லூரியில் சேர விண்ணப்பம்

புதுச்சேரி, ஜூன்.13—

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியின் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

லாஸ்பேட்டையில் புதுவை பல்கலைக் கழகத்தின் சமுதாய கல்லூரி இயங்கி வருகிறது. இங்கு இந்த ஆண்டுக்கான இளங்கலை, முதுகலை பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு கடந்த 1—ந் தேதி முதல் 30—ந் தேதி வரை சமுதாய கல்லூரியின் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விருப்பம் உள்ளவர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பித்து வரும் ஜூலை மாதம் நடைபெற உள்ள மாணவர் சேர்க்கையில் பங்கேற்று பயன்பெறலாம். இங்கு கற்பிக்கப்படும் இளங்கலை, முதுநிலை பட்டம், பட்டயம், சான்றிதழ் படிப்புகள் பற்றிய விபரங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்